டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 30.11.2025 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 134 - Madurai | Online Edition

# சென்னையில் இன்று விட்டு விட்டு கனமழை பெய்யக்கூடும்!

## வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, நவ.29

வங்கக்கடலில் மையம் கொண்டுள்ள டிட்வா புயல் மணிக்கு 10 கி.மீ வேகத்தில் வடக்கு, வடமேற்கு திசையில் நகர்கிறது. சென்னைக்கு 350 கி.மீ தூரத்தில் தெற்கு திசையில் மையம் கொண்டுள்ளது. புதுச்சேரிக்கு 250 கி.மீ. தொலைவிலும், காரைக்காலுக்கு 150 கி.மீ. தொலைவிலும் டிட்வா புயல் மையம் கொண்டுள்ளது. தொடர்ந்து வடக்கு, வடமேற்கு திசையில் நகரும் டிட்வா புயல் வடதமிழ்நாட்டின் கடலோரத்தை ஒட்டி செல்லும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகை மாவட்டங்களில் அதி கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் இன்று அதி கனமழை பெய்ய வாய்ப்பு எனவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னையில் இன்று மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழ்நாட்டில் டிசம்பர் 1ம் தேதி முதல் படிப்படியாக மழை குறையக்கூடும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.



# அஞ்சல் துறை சார்பில் மாட்டுவண்டி பேரணி நடத்தப்பட்டு சிறப்பு அஞ்சல் உறை வெளியிடப்பட்டது

புது தில்லி, நவ.29

மத்திய அரசின் தூய்மை சிறப்பு பிரச்சாரம் 5.0-ன் தொடர்ச்சியாக தூய்மை பிரச்சார இரு வார விழா 16 நவம்பர் 2025 முதல் 30 நவம்பர் 2025 வரை கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக இந்திய அஞ்சல் துறை சார்பில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள பூண்டி முதல் திருக்காட்டுப்பள்ளி வரை மாட்டுவண்டி பேரணி நடத்தப்பட்டது.

இயற்கையை நேசிக்கும் கிராமப்புற மக்களுக்கு தூய்மை விழிப்புணர்வை நேரடியாக கொண்டு சேர்க்கும் வகையில் நடைபெற்ற இப்பேரணியில் அடித்தள அளவில் தூய்மை என்ற சிறப்பு அஞ்சல் உறை மாட்டுவண்டியில் எடுத்துவரப்பட்டு பேரணியின் முடிவில் திருக்காட்டுப்பள்ளி துணை அஞ்சல் அலுவலகத்தில் மத்திய மண்டல அஞ்சல் தலைவர் வீ.நிர்மலா தேவியால் வெளியிடப்பட்டது. இது தமிழ்நாட்டில் மாட்டு வண்டியில் கொண்டு வரப்பட்டு வெளியிடப்பட்ட முதல் சிறப்பு அஞ்சல் உறை ஆகும்.

மேலும் இந்த சிறப்பு அஞ்சல் உறையில் உள்ள QR Code-ஐ ஸ்கேன் செய்தால் பூண்டி துணை அஞ்சலகம் முதல் திருக் காட்டுப்பள்ளி துணை அஞ்சலகம் வரை நடைபெற்ற மாட்டு வண்டி பேரணியின் முழு காணொளி தொகுப்பையும் காணும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலும் சிறப்பு சேர்க்கும் விதமாக முதல் முறையாக இந்திய அஞ்சல் துறையின் DIGIPIN மற்றும் மாட்டுவண்டி படத்துடன் கூடிய சிறப்பு அஞ்சல் முத்திரை பதிக்கப்பட்டிருந்தது.

மாட்டு வண்டி பேரணி நடத்தி அதில் அஞ்சல் உறையை எடுத்து வந்து வெளியிட்டு தூய்மை குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொண்டது அஞ்சல் துறையின் ஒரு முன்மாதிரியான புதிய முயற்சியாக அமைந்தது. இந்த நிகழ்வில் அஞ்சல் துறை ஊழியர்கள், அதிகாரிகள், அஞ்சல் தலை சேகரிப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தஞ்சாவூர் முதுநிலை கோட்ட கண்காணிப்பாளர் கு.தங்கமணி செய்திருந்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# மூலிகை மற்றும் வெற்றிலை சாகுபடி பற்றிய தொழில்நுட்ப பயிற்சி நடந்தது



ஈரோடு, நவ.29

இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஹசர ஹட்டா மற்றும் வேளாண் அறிவியல் நிலையம், கோபி செட்டிபாளையம் இணைந்து மூலிகை மற்றும் வெற்றிலை சாகுபடி பற்றிய தொழில்நுட்ப பயிற்சி 28.11.25 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் திட்டத்தின் கீழ் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் மலைவாழ் மக்களுக்கு மூலிகை மற்றும் காய்கறி சாகுபடியில் உற்பத்தியை பெருக்கும் வகையில் புதிய தொழில்நுட்பத்தினை எடுத்துரைக்கப்பட்டது. ப.பச்சியப்பன், தோட்டக்கலை தொழில்நுட்ப அலுவலர், வேளாண் அறிவியல் நிலையம் இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகளை வரவேற்று பேசினார்.

இப்பயிற்சினை முனைவர் ஹேமாபிந்து, முதன்மை விஞ்ஞானி, மூலிகை மற்றும் வாசனை பயிர் துறை, இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஹசரஹட்டா தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். முனைவர் சீனிவாசலு, முதன்மை விஞ்ஞானி, மூலிகை மற்றும் வாசனை பயிர் துறை, இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஹசரஹட்டா, வெற்றிலை சாகுபடி பற்றிய தொழில்நுட்பம் பற்றி விரிவாக விளக்கினார். முனைவர் சங்கர், முதுநிலை விஞ்ஞானி, மூலிகை மற்றும் வாசனை பயிர் துறை, இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஹசரஹட்டா, நவீன காய்கறி சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். இப்பயிற்சியின் போது விவசாயிகளுக்கு விதை தொகுப்பு மற்றும் நான்கு புதிய ரக வெற்றிலை விதைக்கொடிகள் வழங்கப்பட்டது. இப் பயிற்சியில் 50 பழங்குடியின விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# தரமற்ற விதைகள் விற்பனை செய்த 52 நிறுவனங்கள் மீது துறை நடவடிக்கை மற்றும் நீதிமன்ற நடவடிக்கை

ஈரோடு, நவ.29

ஈரோடு மாவட்டத்தில் விதை விற்பனை நிறுவனங்களில் தரமற்ற விதைகள் விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் அந்த நிறுவனம் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும் என விதை ஆய்வு துணை இயக்குனர் பெ.சுமதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கையில் கூறியிருப்பதாவது, பயிர் சாகுபடிக்கு தேவையான விதைகள் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட பகுதிகளில் விற்கப்படுகிறது. விவசாயிகளுக்கு தரமான சான்றளிக்கப்பட்ட விதைகள் வழங்கப்பட வேண்டும் என்பதை உறுதி செய்ய விதை ஆய்வுத்துறை செயல்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் உள்ள தனியார், அரசு மற்றும் அரசு சார்ந்த விதை உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்களில் விதை மாதிரிகள் விதை ஆய்வாளர்களால் எடுக்கப்பட்டு விதை பரிசோதனை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றது. இவ்வகையில் ஈரோடு மாவட்டம் விதை ஆய்வுத் துணை இயக்குனர் கட்டுப்பாட்டில் வரும் ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டம் தாராபுரம், காங்கயம் பகுதிகளில் விதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஈரோடு மாவட்ட விதை பரிசோதனை நிலையம் மற்றும் திருப்பூர் மாவட்ட விதை பரிசோதனை நிலையத்திற்கு ஆய்வுக்காக அனுப்பப்படுகிறது. இவ்வாறு இவ்வாண்டு மொத்தம் 3123 விதை மாதிரிகள் முளைப்புத் திறன், இனத் தூய்மை மற்றும் பிடி பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது.

இவற்றுள் 1618 நெல் விதை மாதிரிகள், 696 மக்காச்சோள விதை மாதிரிகள் 337 பருத்தி விதை மாதிரிகள், 104 பயிர் வகைகளும்,418 காய்கறி பயிர்களை உள்ளடக்கியது. இவற்றின் ஆய்வறிக்கையில் 52 விதை மாதிரிகள் தரமற்றது என ஆய்வு அறிக்கை பெறப்பட்டது 19 நெல் விதை மாதிரிகளும் 23 மக்காச்சோள விதை மாதிரிகளும் மற்றும் 10 காய்கறி விதை மாதிரிகளும் ஆகும். இவ்வாறாக ஈரோடு மாவட்டத்தில் இதுவரை 47 விதை விற்பனை நிலையங்கள் மீது துறை நடவடிக்கை 5 விற்பனை நிலையங்கள் மீது நீதிமன்ற நடவடிக்கையும் தொடரப்பட்டு வருகிறது. எனவே தரமான விதைகளை மட்டுமே விற்பனை செய்ய விற்பனையாளர்களுக்கு விதை ஆய்வு துணை இயக்குநர் எச்சரிக்கை வழங்கினார்.





**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.

இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

நன்றி

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

# பருத்தி காயழுகல் நோய் அறிகுறிகள் மற்றும் மேலாண்மை

நோய்க் காரணிகள்

● ஃபியுசேரியம் மொனிலிஃபார்மி, கோலிட்ரோட்ரைக்கம் கேப்சிஸி, அஸ்பெர்ஜில்லஸ்ஃபிலேவஸ், அ.நைகர், ரைஜோபஸ் நைக்ரிகன்ஸ், போட்ரிடிப்லோடியா வகை போன்ற நோய்க் காரணிகள் காய் அழுகலுடன் தொடர்பு கொண்டுள்ளன.



**நோய்க்கு சாதகமான சூழ்நிலை**

● பூக்கள் மற்றும் காய்கள் உருவாகும் நேரத்தில் அதிக மழைப் பொழிவு

● பூச்சிகளால் உண்டாகும் காயங்கள்

● நெருக்கமான இடைவெளி

● பரிந்துரைக்கு அதிகமாக தழைச்சத்து உபயோகம்

**அறிகுறிகள்**

● காய் முழுவதும் கருப்பு (அ) பழுப்பு நிற புள்ளிகள் காணப்படும்.

● அழுகல், வெளியிலோ (அ) உட்பகுதியிலோ காணப்படும்.



● காய், வெடிக்காமல், இளம்பருவத்திலேயே உதிர்ந்துவிடும்.

**மேலாண்மை**

● போதுமான பயிர் இடைவெளி விடவும்.

● பரிந்துரைக்கப்பட்ட உர அளவை பயன்படுத்தவும்.

● கார்பென்டாசிம் (50 % WP) 200கிராம் (அ) மான்கோசெப் (75% WP) 800 கிராம் (அ) காப்பர் ஆக்ஸி குளோரைடு 1 கிலோ / ஏக்கர், 45-ம் நாள் முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்கவும் என சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா கூறினார்.



# சிறுதானியங்களை பதப்படுத்துதல் மற்றும் மதிப்புகூட்டலில் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி



தேனி, நவ.29

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தை சார்ந்த மதுரையிலுள்ள சமுதாய அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டத்தில் உள்ள குள்ளபுரம் கிராமத்தில் அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டம், வேளாண்மையில் பெண்கள் திட்டத்தின் கீழ் சிறுதானியங்கள் பதப்படுத்துதல் மற்றும் மதிப்பு கூட்டலில் தொழில் முனைவோர் மேம்பாடு குறித்து ஐந்து நாள் திறன் மேம்பாட்டு பயிற்சியானது 24.11.25 முதல் 28.11.25 வரை நடைபெற்றது.

இதன் தொடக்க விழா பெரியகுளம் வட்டம் குள்ளபுரம் கிராமத்தில் 24.11.25ஆம் தேதி அன்று விஞ்ஞானிகளான முனைவர்கள் ச.ஆரோக்கியமேரி, இரா.சரவணக்குமார், லெ.செந்தாமரை செல்வி மற்றும் இளநிலை ஆராய்ச்சி யாளர்கள் ஆகியோர் முன்னிலையில் துவங்கப் பட்டது.

முதல் நாள் பயிற்சியில் (24.11.25) சிறுதானிய உணவுகளான சத்துமாவு கலவை, சிறுதானிய லட்டு, சத்துப்பால், சோளப்பொறி போன்ற உணவுப்பொருட்கள் தயாரிப்பது குறித்த செயல்முறை விளக்கத்துடன் கூடிய பயிற்சி அளிக்கப்பட்டது. இரண்டாம் நாள் (25.11.25) சிறுதானிய ரவை கேசரி, பொங்கல், புட்டு மிக்ஸ், கொழுக்கட்டை மிக்ஸ், ராகி பக்கோடா, சிறுதானிய முருக்கு போன்ற உணவுப்பொருட்கள் தயாரிப்பது குறித்த செயல்முறை விளக்கத்துடன் கூடிய பயிற்சி அளிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து மூன்றாம் நாள் (26.11.25) சமுதாய அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு பயிற்சியாளர்களை

அழைத்து வந்து அடுமனை பொருட்களான சிறுதானிய கேக், ரொட்டி, பிஸ்கட், பன் மற்றும் சிறுதானிய நூடுல்ஸ் போன்ற உணவுப்பொருட்கள் தயாரிப்பது குறித்த செயல்முறை விளக்கத்துடன் கூடிய பயிற்சி அளிக்கப்பட்டது.

இதில் சமுதாய அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் ச.காஞ்சனா, சிறுதானியத்தின் முக்கியத்துவம், சந்தைப்படுத்துதல், சிறுதானிய சத்துகள் மற்றும் பேக்கிங் தொழில் நுட்பம் குறித்து எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் முனைவர் இரா.விஜயலெட்சுமி வரவேற்புரை யாற்றினார் மற்றும் முனைவர் ச.ஆரோக்கியமேரி நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்வில் சிறுதானியங்கள் பயிரிடும் விவசாயி களுக்கு விதைகள் வழங்கப்பட்டன. இதில் கல்லூரியில் உள்ள மூத்த பேராசிரியர்கள் மற்றும் துறை தலைவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

நான்காம் நாள் (27.11.25) இணைய வழி வகுப்புகள் நடைபெற்றன. இதில் மதுரை வேளாண் வணிக கருத்தொக்க மையத்தில் (MABIF) உள்ள வசதிகள் பற்றிய வகுப்பானது தீபிகா, மேலாளரால் விளக்கப்பட்டது. இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் பற்றி கருணாநிதி ஓய்வு பெற்ற உணவு பாதுகாப்பு அலுவலர் எடுத்துரைத்தார்.

ஐந்தாம் நாள் (28.11.25) இணைய வழி பயிற்சியில் அமேசான் இணையத்தில் உணவுப்பொருட்களை சந்தைப்படுத்துதல் பற்றி மகாலெட்சுமியால் எடுத்துரைக்கப்பட்டது. இதனையடுத்து பெண் தொழில் முனைவோர் சந்திக்கும் தடைகள் மற்றும் தயக்கங்கள் பற்றி மாவட்ட சமூகத்துறை அதிகாரி காந்திமதியால் எடுத்துரைக் கப்பட்டது. திட்ட அறிக்கை தயாரிப்பது குறித்து வேம்பரசன் விளக்கினார்.

இறுதியாக சிறு குறு தொழில் முனைவோருக்கான அரசு நிறுவனங்களில் வழங்கப்படும் கடன் உதவி பற்றி உமா சந்திரா எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் ஐந்தாம் நாள் முப்பதுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# அரசு பள்ளி மாணவர்களுக்கு இயற்கை விவசாயம் குறித்து கண்டுணர்வு சுற்றுலா

வேலூர், நவ.29

வேலூர் மாவட்டம், திமிரி வட்டாரம் வேளாண் துறை சார்பில் அட்மா திட்டத்தின் திட்டத்தின் கீழ் பள்ளி மாணவர்களுக்கு இயற்கை வேளாண்மை குறித்து ஒரு நாள் கண்டுணர்வு சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டது. திமிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ராமன் தலைமையில் திமிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சார்ந்த 50 மாணவர்கள் மற்றும் பெண்ணகர் அரசு மேல்நிலைப் பள்ளியைச் சார்ந்த 50 மாணவ மாணவிகள் கலவை வேளாண்மை கல்லூரி கண்டுணர்வு சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டது. சுற்றுலாவில் மாணவர்களுக்கு இயற்கை வேளாண்மை குறித்த தொழில் நுட்பங்கள் மற்றும் உயிர்ம உரம் தயாரித்தல் மண்புழு உரம் தயாரித்தல் குறித்த செயல் விளக்க முறையில் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.



இயற்கை உரங்களான பஞ்சகாவியா, மீன் அமிலம் இயற்கை பூச்சி விரட்டி தயாரித்தல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்தும் மண் வளமும் பாதுகாத்தல் குறித்தும் விளக்கமாக எடுத்துக் கூறினார். இயற்கை விவசாயத்தில் கால்நடைகள் முக்கிய பங்கு குறித்தும் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்து விளக்கமாக கூறப்பட்டது. பள்ளி மாணவர்களுடன் திமிரி மற்றும் பென்னகர் பள்ளியைச் சார்ந்த சண்முக வடிவு மற்றும் சங்கர் வேளாண்மை ஆசிரியர்கள் உடன் வந்திருந்தனர்.

வேளாண்மை துறை சார்பாக துணை அலுவலர் இருதயராஜ் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் கோபாலகிருஷ்ணன் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# செமையான லாபம் தரும் செவ்வாழை சாகுபடி தொழில்நுட்பங்கள்



இன்றைக்கு பட்டி தொட்டிகளில் உள்ள பெட்டிக்கடையில் கூட தினமும் ஒரு தார் வாழைக்கு மேலே விற்பனையாக கூடிய ஒரே வாழை செவ்வாழை தான். அதில் என்ன சத்துகள் இருக்கும் என தெரியுமா? மற்ற வாழைகளை விட இதில் விட்டமின்-சி-யும் பி6-க்கும் அதிகமாகவும் ஆண்டி ஆக்ஸிடெண்ட் (ANTI - OXIDENT) மற்றும் பீட்டா, கரோட்டின் உள்ளதால் இதனை விரும்பி இளைஞர்கள் முதல் முதியவர் வரை உண்ணக்கூடிய ஒரு பழமாக உள்ளது. அத்துடன் அதிக நார்சத்து உள்ளதால் எளிதாக செரிமானத்திற்கு உதவுகிறது என்றால் ஆச்சரியம் இல்லை.

அப்படிபட்ட செவ்வாழை சாகுபடி பற்றி பார்ப்போம்.

**பருவமும் பட்டமும்**

வாழை பொதுவாக கார்த்திகை, தை, மாசி மாத பட்டங்களில் சாகுபடி செய்யலாம்.

**நடவு வாழைக்கன்று தேர்வு**

நல்ல மகசூலுக்கு அடிப்படை தரமான நோயற்ற திரட்சியான வாழைக்கன்றுகளை தேர்வு செய்ய வேண்டும். 2 முதல் 3 அடி வரை உயரமுள்ள 3 மாத வயதான ஈட்டி கன்றுகளை தேர்வு செய்ய வேண்டும். விதைக்கிழங்கு 1.5 முதல் 2 கிலோ எடையுள்ளதாக இருக்க வேண்டும். கிழங்கின் அடிப்பகுதியில் வேர்கள் இருந்தால் அவற்றை நீக்கி விட்டு நடவு செய்ய வேண்டும். நடும் முன் வாடல் நோயை கட்டுப்படுத்த பெவிஸ்டின் மருந்து கரைசலில் முக்கி எடுத்தபின், மண் சேற்றில் முக்கி எடுத்த பின்அதன் மீது 40 கிராம் ‘கார்போ பியூரான்‘ குருணை மருந்தை தூவினால் வாழையில் நூற்புழுக்கள் தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.

திசு வளர்ப்பு கன்றாக இருந்தால் 5 அல்லது 6 இலைகள் உள்ள கன்றுகளை தேர்வு செய்து, நடவின் போது கன்று ஒன்றுக்கு 25 கிராம் பேசில்லஸ் சப்டிலிஸ் மருந்து இட வேண்டும்.

**நடவு வயல் தயாரிப்பு**

நன்றாக 4/5 தடவை உழுது பின் தொழு உரமிட்ட பின் ஒன்றரை அடி நீளம் X அகலம் X ஆழம் கொண்ட குழி எடுத்து வேப்பம் புண்ணாக்கு இட்டு மேல் மண்ணுடன் கலந்து கன்றுகளை நடவு செய்ய வேண்டும்.

**இடைவெளி**

வரிசைக்கு வரிசை 7 அடியும் கன்றுக்கு கன்று 7அடி இடைவெளியில் நடவு செய்ய வேண்டும்.

**நீர் பாசனம்**

நடவு செய்த உடனேயும் அதற்கு பிறகு 4 நாட்கள் கழித்து ஒரு முறையும் பாசனம் செய்ய வேண்டும். உரமிட்ட பின் அதிகமாக நீர்பாய்ச்ச வேண்டும்.

**உர மேலாண்மை**

ஒவ்வொரு வாழைக்கன்றுக்கும் 110 கிராம் தழைச்சத்து, 35 கிராம் மணிச்சத்தும் 330 கிராம் சாம்பல் சத்தும் கன்று நட்ட 2, 4, 5, 7வது மாதங்களில் பிரித்து இட வேண்டும். இத்துடன் ICAR-யின் (BANANA SPECIAL) என்ற நுண்ணூட்ட கலவையை ஒரு லிட்டர் நீருக்கு 5 கிராம் என்றளவில் 5, 6, 7வது மாதங்களிலும் வாழைத்தார் வளர்ச்சியின் போதும் இலைவழியாக தெளிக்க வேண்டும். வாய்ப்பு இல்லாத பட்சத்தில் (ROOT FEEDING) நீரில் கரைத்து வாழைக் கட்டைகளில் ஊற்றலாம். இதனால் 10-20% கூடுதலான மகசூல் கிடைக்கும்.

**ஊடு பயிர்**

வாழையில் களைகளை கட்டுப்படுத்தவும் கூடுதலான வருமான பெற ஊடு பயிர் சாகுபடி செய்ய வேண்டும். தட்டைபயறு, சின்ன வெங்காயம், கொத்த மல்லி,அவரை, தக்காளி போன்ற பயிர்களை ஊடுபயிராக சாகுபடி செய்யலாம்.

**பூச்சி / நோய் மேலாண்மை**

பூச்சிகளில் வாழை கூண் வண்டு தாக்குதல் ஏற்படும். அதாவது வாழைத்தண்டில் துளையிட்டு தாக்கும், துளையிட்ட இடங்களில் நீர் வடியும்.

இதனால் இலைகள் சிறிதாகவும் காய்கள் அளவு சிறுத்தும் காணப்படும். ஒரு காற்று பலமாக அடித்தாலே மரம் கீழே சாயும். இதற்கு பயிர் பாதுகாப்பு செய்திட வேண்டும். நோய்களில் சிக்டோக்கா 'இலைப்புள்ளி நோய் இலைகளில் மஞ்சள்நிற புள்ளிகள் தோன்றி சாம்பல் நிறமாகி இலை முழுவதும் விரைவில் காய்ந்து விடும். காய்களின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு பிஞ்சிலே காய் பழுத்து விடும். இதற்கும் முறையான பயிர் பாதுகாப்பு செய்திட வேண்டும்.

**அறுவடை**

கன்று நட்ட 12 முதல் 15 மாதங்களில் அறுவடை செய்ய தயாராக விடும். ஒரு மரத்திற்கு 20 முதல் 25 கிலோ எடை உள்ள வாழைக்காய்கள் கிடைக்கும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# தேங்காய் பயிர் செய்கை பயிற்சி

திருப்பத்தூர், நவ.29

திருப்பத்தூர் மாவட்டம், அம்பூர் வட்டாரத்தின் கீழ் நாச்சியார்க் குப்பம் கிராமத்தில் தேங்காய் சாகுபடி மேம்பாட்டிற்கான சிறப்பு பயிற்சி நிகழ்ச்சி VIT மாணவர்கள் இணைந்து நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு ஊராட்சி தலைவர் சரஸ்வதி தலைமையேற்று, தேங்காய் துறையில் புதுமையான தொழில்நுட்பங்களைப் பற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு அளித்தார்.





இந்நிகழ்வில், தோட்டக்கலை உதவி இயக்குநர் சங்கீதா, தேங்காய் பயிரில் Integrated Disease Management (IDM), Integrated Pest Management (IPM) மற்றும் துளி நீர் பாசனம் பற்றிய அடிப்படை வழிகாட்டுதல்களை வழங்கினார்.

**பயிற்சியின் முக்கிய அம்சமாக, ஹினிசா பல்கலைக்கழக மாணவர் சுந்தர்ராஜன் விவசாயிகளுக்கு தெரிவித்ததாவது**

- **தேங்காய் IDM முறைகள்**
- பூஞ்சை, காய் கொத்து வீழ்ச்சி, போஃரியா போன்ற நோய்களை தடுக்கும் முறைகள்
- உயிரி பூச்சிக்கொல்லி, Trichoderma பயன்பாடு
- மண் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் கருத்துக்கள்
- **தேங்காய் IPM முறைகள்**
- தேங்காய் ஈச்சுருவி, கரும்பு பறக்கும் பூச்சி, மைட் தாக்குதல் அடையாளம்
- Yellow sticky trap, pheromone trap பயன்படுத்தும் முறைகள்
- நன்மை செய்யும் பூச்சிகளைப் பாதுகாப்பது
- தேங்காய் தோட்டத்தில் இடைக்கழிவு (Intercrop) பயிர்கள்
- மஞ்சள், பச்சை பயறு, பக்குவம், அன்னாசி, வாழை போன்ற பயிர்களை சேர்த்து வருமானம் அதிகரிக்கும் முறைகள்




- நிழல் சகிப்புத்தன்மை உள்ள பயிர்கள்

- இடைக்கழிவு மூலம் மண் வளம், ஈரப்பதம் பாதுகாப்பு என்று விரிவாக விளக்கினார்.

VIT மாணவர்கள் இணைந்து, தேங்காய் சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்கள், விவசாயிகளின் பிரச்சினைகள் மற்றும் பொருளாதார வாய்ப்புகள் குறித்து AI–ஆல் (onsite) ஆராய்ச்சி செய்து விவசாயிகளுடன் பகிர்ந்து கொண்டனர்.

நிகழ்வில் கலந்து கொண்ட விவசாயிகள் IDM, IPM மற்றும் இடைக்கழிவு முறைகள் பயனுள்ளதாக இருந்ததாகவும், தேங்காய் பயிர் மேலாண்மையில் இந்த பயிற்சி மிகப்பெரிய உதவியாக இருப்பதாகவும் தெரிவித்தனர்.

# திருந்திய நெல் சாகுபடி முன்மாதிரி செயல் விளக்கத்திடலில் வேளாண்மை துணை இயக்குனர் ஆய்வு



திருச்சி, நவ.29

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை சார்ந்த திட்டங்கள் பற்றி திருச்சி மாவட்டம், வேளாண்மை துணை இயக்குனர், உழவர் பயிற்சி நிலையம், இராஜசேகர், நேரில் பார்வையிட்டு வயல் ஆய்வு மேற்கொண்டார்.




வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா திட்டம் கீழ் நடப்பாண்டில் விவசாயிகள் வயல்வெளி பள்ளி இனத்தின் கீழ் முள்ளிப் பாடி கிராமத்தில் நன்னெறி வேளாண் முறைகள் – திருந்திய நெல் சாகுபடி முன்மாதிரி செயல் விளக்கத்திடல் அமைத்துள்ள விவசாயி மணிவண்ணன் அவரது வயலில் நெல் வரிசை நடவு, வரப்பு பயிராக உளுந்து சாகுபடி செய்துள்ளதை பார்வையிட்டு விவசாயிகளுக்கு வரப்பு பயிராக உளுந்து சாகுபடி செய்வதின் நன்மைகள், திருந்திய நெல் சாகுபடியில் கோனோவீடர் களையெடுக்கும் கருவி மூலம் களையெடுத்தல் குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

மேலும் செயல் விளக்கம் இனத்தில் காட்டு விலங்குகள் / காட்டெருமை மேலாண்மை செயல் விளக்கத்திடல் அமைத்து உள்ள விவசாயி வேல்முருகன் அவர்களது வயலினை பார்வையிட்டு காட்டு விலங்குகள் மற்றும் மயில்களின் தாக்குதல் அதனை கட்டுப்படுத்துதல் குறித்தும் கேட்டறிந்தார். தோளூர்பட்டி கிராமத்தில் நெல் அனுசரணை ஆராய்ச்சி திடல் மற்றும் உளுந்து, நிலக்கடலை விதை பண்ணை அமைத்துள்ள விவசாயி பால்ராஜ் வயலில் ஆய்வு செய்தார்.

அட்மா திட்டத்தின் கீழ் காட்டுப் புத்தூர் கிராமத்தில் சண்முகவேல் விவசாயிக்கு பால் கறவை இயந்திரம் மானியத்தில் வழங்கப் பட்டது. இந்த ஆய்வின் போது தொட்டியம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சௌந்தர்ராஜன், வேளாண்மை அலுவ லர்கள் நாகராஜன் மற்றும் இந்து பாலா, உதவி விதை சான்று அலுவலர் ரேவதி, அட்மா திட்டம் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகுந்தா, உதவி தொழில்நுட்ப மேலாளர் கீர்த்தனா உதவி வேளாண்மை அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# இயற்கை களைக்கொல்லி கண்டுபிடிப்பு

## மஞ்சூரியன் வால்நட் இலைகள் பற்றிய ஒரு அறிக்கை

**செயல்பாட்டுச் சுருக்கம்**

மஞ்சூரியன் வால்நட் (Juglans mandshurica) மரத்தின் இலைகளிலிருந்து 2Z-decaprenol என்ற சக்திவாய்ந்த, இயற்கையான களைக்கொல்லி சேர்மம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தற்போது பயன்பாட்டில் உள்ள சில களைக்கொல்லிகளை விடவும், வால்நட் மரங்களில் காணப்படும் juglone என்ற வேதிப் பொருளை விடவும் இது அதிக ஆற்றல் வாய்ந்தது என ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்தச் சேர்மம், களைகளின் வேர் வளர்ச்சியைத் தடுத்து, அவற்றின் தற்காப்பு மற்றும் அழுத்தப் பாதைகளில் குறுக்கிட்டு, பலமுனைத் தாக்குதல் மூலம் செயல்படுகிறது. இதனால், களைகள் இதற்கு எதிராக எதிர்ப்புத்தன்மையை வளர்ப்பது கடினமாகிறது.

இந்தக் கண்டுபிடிப்பு, சுற்றுச்சூழலுக்கு உகந்த, மக்கும் தன்மை கொண்ட மற்றும் புதுப்பிக்கத்தக்க ஒரு தீர்வை வழங்குகிறது. இதன் மூலம், மண் மற்றும் நீரில் இரசாயன எச்சங்கள் தங்குவது குறையும். நிலையான விவசாயத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும் திறனைக் கொண்டுள்ள இந்த இயற்கை களைக்கொல்லி, விவசாயப் பண்ணைகள், தோட்டங்கள் மற்றும் பொதுப் பசுமை வெளிகளில் இரசாயனங்களின் பயன்பாட்டைக் கணிசமாகக் குறைக்கக்கூடும். இருப்பினும், இந்தச் சேர்மத்தை வணிக ரீதியாகப் பயன்படுத்துவதற்கு முன்பு, அதன் அளவு, பயன்பாட்டு முறைகள், மற்றும் பயிர்களுக்கான பாதுகாப்பு குறித்து மேலதிக ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

**விரிவான பகுப்பாய்வு**

**1. கண்டுபிடிப்பின் மூலம் மற்றும் முக்கியத்துவம்**

வேளாண்மையில் பெரும்பாலான கண்டுபிடிப்புகள் ஆய்வகங்களிலிருந்து வரும் நிலையில், மஞ்சூரியன் வால்நட் மரத்தின் இலைகளிலிருந்து ஒரு குறிப்பிடத்தக்க இயற்கை களைக் கொல்லி கண்டறியப்பட்டுள்ளது. இந்த கண்டுபிடிப்பு, களைக் கட்டுப்பாட்டில் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறந்துள்ளது.

**மூலத் தாவரம் மற்றும் சேர்மம்**

**ஆதாரம் :** மஞ்சூரியன் வால்நட் (Juglans mandshurica) மரத்தின் இலைகள்.

**அடையாளம் காணப்பட்ட சேர்மம் :** 2Z-decaprenol.

**வெளியீடு :** இந்த ஆய்வு முடிவுகள் **Journal of Agricultural and Food Chemistry** என்ற மதிப்பாய்வு செய்யப்பட்ட அறிவியல் இதழில் வெளியிடப்பட்டுள்ளன.

**ஆராய்ச்சிக் குழு :** கியூஷு பல்கலைக்கழகம் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் ஆராய்ச்சியாளர்கள் இந்தக் கண்டுபிடிப்பை நிகழ்த்தியுள்ளனர்.

**ஆய்வின் தொடக்கம் மற்றும் செயல்திறன்**

வால்நட் இலைகள் தரையில் விழுந்து மக்கத் தொடங்கும் போது மண்ணில் ஏற்படும் விளைவுகளைப் பிரதிபலிக்கும் வகையில் ஒரு மண் அடிப்படையிலான சோதனை மூலம் இந்த ஆய்வு தொடங்கியது. இலைச் சாற்றின் ஒரு குறிப்பிட்ட பகுதியைப் பிரித்தெடுத்த போது, அது சோதனைத் தாவரங் களின் வேர்களில் தீவிரமான பாதிப்பை ஏற்படுத்தியது. நாற்றுகள் சுருண்டு, வளர்ச்சி குன்றி, அழுத்தத்தின் அறிகுறி களைக் காட்டின.

இந்தச் சேர்மத்தின் ஆற்றல், வால்நட் இனங்களில் காணப் படும் juglone என்ற அறியப்பட்ட அல்லோபதி சேர்மத்தை விட மிகவும் சக்தி வாய்ந்தது என்பது விஞ்ஞானிகளை ஆச்சரியப் படுத்தியது.

**2. செயல்பாட்டு வழிமுறை**

இந்த இயற்கை களைக்கொல்லி, செயற்கை களைக்கொல்லி களைப் போல் ஒற்றை இலக்கைக் குறிவைக்காமல், ஒரே நேரத்தில் பல வழிகளில் செயல்படுகிறது. இது இதன் செயல்திறனை அதிகரிப்பதுடன், களைகள் எதிர்ப்புத் தன்மையை வளர்ப்பதையும் தடுக்கிறது.

**பலமுனைத் தாக்குதல் :** இந்த வால்நட் இலைச் சேர்மம், களைகளில் உள்ள தற்காப்பு சமிக்ஞைகளைத் தூண்டி, அதே நேரத்தில் அவற்றின் அத்தியாவசிய அழுத்த எதிர்ப்புப் பாதைகளை அடக்குகிறது. இந்த இரட்டைத் தாக்குதல், இலக்கு வைக்கப்பட்ட தாவரங்களை மிகவும் பலவீனமாக்குகிறது.

எதிர்ப்புத்தன்மை உருவாதலைத் தடுத்தல்: பல உயிரியல் அடுக்குகளில் ஒரே நேரத்தில் செயல்படுவதால், நவீன இரசாயன களைக்கொல்லிகளில் காணப்படும் முக்கியப் பிரச்சினையான எதிர்ப்புத்தன்மை உருவாவதை இந்த இயற்கை சேர்மம் தடுக்கக்கூடும்.

### 3. சுற்றுச்சூழல் மற்றும் விவசாய நன்மைகள்

இந்தக் கண்டுபிடிப்பின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று அதன் சுற்றுச்சூழல் தாக்கம் ஆகும். இது விவசாயத் துறைக்கு நீண்டகாலப் பலன்களை அளிக்கும் திறனைக் கொண்டுள்ளது.

#### சுற்றுச்சூழல் பாதுகாப்பு

**புதுப்பிக்கத்தக்கது :** இது தாவர இலையிலிருந்து வருவதால், இது ஒரு புதுப்பிக்கத்தக்க வளமாகும்.

**மக்கும் தன்மை :** இயற்கையானது என்பதால், இது எளிதில் மக்கும் தன்மை கொண்டது. மண் அல்லது நீரில் தீங்கு விளைவிக்கும் எச்சங்களை விட்டுச் செல்ல வாய்ப்பில்லை.

**சூழலியல் சமநிலை :** நன்மை செய்யும் பூச்சிகள், நுண்ணுயிரிகள் அல்லது சுற்றியுள்ள சூழலியல் அமைப்புகளுக்குத் தீங்கு விளைவிக்காமல் களைகளைக் கட்டுப்படுத்த இது உதவக் கூடும்.

#### நிலையான விவசாயம்

**இரசாயன சார்பு குறைதல் :** இந்தச் சேர்மம் ஒரு தெளிப்பான் அல்லது மண் சிகிச்சையாக உருவாக்கப்பட்டால், செயற்கை இரசாயனங்கள் மீதான சார்பு பெருமளவில் குறையும்.

**விவசாய உபபொருட்களின் பயன்பாடு :** வால்நட் மரங்களின் இலைகள், உமிகள் மற்றும் கிளைகள் போன்ற விவசாய உப பொருட்களிலிருந்து இந்தச் சேர்மத்தைப் பிரித்தெடுக்க முடியும், இது ஒரு நிலையான உற்பத்தி மாதிரியை உருவாக்குகிறது.

### 4. எதிர்காலப் பயன்பாடுகள் மற்றும் சவால்கள்

இந்தக் கண்டுபிடிப்பு ஒரு திருப்புமுனையாக இருந்தாலும், அதனைப் பரவலாகப் பயன்படுத்துவதற்கு முன்பு பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

**சாத்தியமான பயன்பாடுகள்**

விவசாயப் பண்ணைகள், தோட்டங்கள், பழத்தோட்டங்கள் மற்றும் பொதுப் பசுமை வெளிகளுக்கான புதிய கரிம களைக் கொல்லி தயாரிப்புகளில் இது ஒரு முக்கிய மூலப் பொருளாகலாம்.

களைகளை இயற்கையாக அடக்கும் மறைக்கப்பட்ட அல்லோபதி சேர்மங்களைக் கொண்ட பிற தாவர இனங்கள் குறித்த எதிர்கால ஆராய்ச்சிகளுக்கு இது ஊக்கமளிக்கக்கூடும்.



**எதிர்கொள்ளும் சவால்கள்**

**பிரித்தெடுத்தல் :** பெரிய அளவில் இந்தச் சேர்மத்தைப் பிரித்தெடுக்க செலவு குறைந்த தொழில்நுட்பங்கள் தேவை.

செயல்திறன் சோதனை : வெவ்வேறு காலநிலைகள், மண் வகைகள் மற்றும் கரிமப் பொருட்களின் அளவுகளில் இது எவ்வாறு செயல்படுகிறது என்பதைச் சோதிக்க வேண்டும்.

**தேர்ந்தெடுக்கும் திறன் :** இந்தக் களைக்கொல்லி, பயிர்களுக்குச் சேதம் விளைவிக்காமல் களைகளை மட்டும் குறிவைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**ஒழுங்குமுறை ஒப்புதல்கள் :** பரவலான பயன்பாட்டிற்கு முன்பு ஒழுங்குமுறை ஆய்வுகள் மற்றும் சுற்றுச்சூழல் மதிப்பீடுகள் அவசியமாகும்.

**முடிவுரை :** சவால்கள் இருந்த போதிலும், விவசாயம் மற்றும் சுற்றுச் சூழலுக்கு நீண்ட காலத்திற்கு இது அளிக்கும் நன்மைகள் காரணமாக, அவற்றை எதிர்கொள்வது மதிப்பு வாய்ந்தது என நிபுணர்கள் நம்புகின்றனர். பெரும்பாலும் கவனிக்கப்படாத ஒரு எளிய தாவர இலை, நிறுவப்பட்ட களைக் கட்டுப்பாட்டு முறைகளுக்குச் சவால் விடும் அளவுக்குச் சக்திவாய்ந்த ஒரு சேர்மத்தைக் கொண்டுள்ளது என்பது இந்தக் கண்டுபிடிப்பின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த இயற்கை களைக்கொல்லி, பயிர்களைப் பாதுகாத்து, இரசாயனப் பயன்பாட்டைக் குறைத்து, சூழலியல் சமநிலையைப் பேணும் ஒரு புதிய தலைமுறை களைக்கொல்லிகளின் உருவாக்கத்திற்கு வழிவகுக்கும். களைக் கட்டுப்பாட்டின் எதிர்காலம் ஒரு தொழிற்சாலையில் அல்ல, ஒரு வால்நட் இலையின் அமைதியான வீழ்ச்சியில் தொடங்கலாம்.

நன்றி : Journal of Agricultural and Food Chemistry

தமிழாக்கம் : கோ. சுரேஷ்குமார், ஓய்வு பெற்ற வேளாண் அறிவியல் கல்வி ஆசிரியர், கோவில்பட்டி. 94436 20932.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# மாடுகளில் கால் குளம்புகளுக்கிடையே ஏற்படும் சதை வளர்ச்சி

மாடுகளில் கால் குளம்புகளுக்கிடையே ஏற்படும் சதையானது குளம்புகளுக்கிடையே உள்ள தோலில் தடிமனாக ஏற்படும் அதிப்படியான வளர்ச்சியாகும். இது ஆரம்பத்தில் தீங்கற்றதாக இருந்தாலும்,சதை வளர்ச்சியில் நோய்க்கிருமிகளால் தொற்று ஏற்படும் பொழுது மாடுகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்து கின்றன. தகுந்த சமயத்தில் சிகிச்சையளிக்கப்படாவிட்டால் மாடுகள் சரியாக நடக்க முடியாமல் சிரமப்படுவதோடுநடக்கும் பொழுது ஏற்படும். வலி காரணமாக தீவனம் உண்ணாமல் உற்பத்தித்திறன் குறைவதால் இது மாடுகளின் உடல் நலன் மற்றும் பண்ணை பொருளாதாரத்தை பாதிக்கக்கூடிய ஒரு பிரச்சினையாக இருக்கிறது.

**கால் குளம்புகளுக்கிடையே சதை வளர்ச்சி ஏற்படுவதற்கான காரணங்கள்**

● மோசமான குளம்பு அமைப்பு, சீரற்ற குளம்புகள் அல்லது சீராக பராமரிக்காத குளம்புகளால் ஏற்படும் பாதிப்பு

● ஈரமான மற்றும் சுகாதாரமற்ற கொட்டகைதரையில் மாடுகளை பராமரிக்கும் பொழுது கால்களுக்கிடையே உள்ள தோல் மென்மையாகி நோய்த்தொற்று காரணமாக கால் குளம்பு நோய்,தோல் அழற்சி நோய் அல்லது இதர குளம்பு நோய்களால் ஏற்படும் பாதிப்பு

● அதிக உடல் எடை கொண்ட மாடுகளில் அதிக எடை காரணமாக குளம்புகளில் ஏற்படும் அதிகப்படியான அழுத்தம்.

**அறிகுறிகள்**

● கால் குளம்புகளுக்கு இடையில் சிவந்த, வீங்கிய சதைப் பற்றுள்ள வளர்ச்சி தென்படும்.

● மாடுகள் நடக்க முடியாமல் நொண்டும்.

● கடினமான நிலப்பரப்பில் நிற்கும் பொழுது வலி காரணமாக பாதிக்கப்பட்ட காலை அடிக்கடி தூக்கும்.

● சதை வளர்ச்சியில் காயம் ஏற்பட்டாலோ அல்லது நோய் தொற்று ஏற்பட்டாலோ சீழ் பிடித்து புண்ணாகி துர்நாற்றம் வீசும். ஈக்கள் மொய்த்து புழு வைத்த புண்களாக மாறி மேலும் நிலைமையை மோசமாக்கும்.

**சிகிச்சை முறைகள்**

கால் குளம்புகளுக்கு இடையில் உள்ள சதை வளர்ச்சிக்கான சிகிச்சையானது சதையின் வளர்ச்சி அளவு, காயத்தின் தீவிரம் மற்றும் இரண்டாம் நிலை நோய் தொற்றுகள் இருப்பதைப் பொறுத்து கால்நடை மருத்துவர் உதவியுடன் சிகிச்சை அளிக்க வேண்டும். நோய் தொற்று இல்லாத சதை வளர்ச்சிக்கு காப்பர் சல்பேட் அல்லது துத்தநாக சல்பேட் கொண்ட கரைசலில் பாதிக்கப்பட்ட கால்களை தினமும் 10 நிமிடம் வைப்பதன் மூலம் சதை வளர்ச்சியானது சிறிது சிறிதாக குறைந்து விடும். மேலும் காயத்திற்கு கிருமி நாசினிகள் அல்லது நுண்ணுயிர் எதிர்ப்பு களிம்புகளை தினமும் இரு வேளை தடவ வேண்டும். கால் குளம்புகளை ஒரே சீராக வெட்டிவிட வேண்டும். மேலும் வலியை நீக்கவும், வீக்கம் குறைவதற்கும் புண்களில் ஏற்பட்டுள்ள நோய் தொற்றை நிவர்த்தி செய்யவும் வலி நிவாரண மருந்தையும், ஆண்டிபயாடிக் மருந்தையும் ஊசி மூலம் செலுத்த வேண்டும். சதை வளர்ச்சியானது அளவில் பெரியதாகவும், நோய் தொற்று அதிகமாகவும் உள்ள மாடுகளுக்கு அறுவை சிகிச்சை மூலம் சதையை அகற்ற வேண்டும்.

**தடுப்பு முறைகள்**

● மாடுகளில் கால் குளம்புகளுக்கிடையே ஏற்படும் சதை வளர்ச்சியை தடுப்பதில் சுத்தமான கொட்டகை பராமரிப்பு முறைகள் மற்றும் சரியான குளம்பு பராமரிப்பு ஆகியன இன்றியமையாததாக இருக்கின்றன. எனவே மாடுகளை வைத்திருக்கும் இடம் சுத்த மானதாகவும் ஈரமில்லாமலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். மாடுகளை சாணத்திலும்,சகதியிலும் ஈரமான மண் தரையிலும் கட்டிப் போடக்கூடாது.

● அதிப்படியாக மற்றும் சீரற்ற குளம்புகளை வெட்டி குளம்புகள் சீராக இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

● மாடுகள் அதிக உடல் எடை இல்லாதவாறு தீவனப் பராமரிப்பில் கவனம் செலுத் தவேண்டும்.

● மாடுகளின் கால்களை அவ்வப்பொழுது பரிசோதனை செய்து குளம்புகளுக்கிடையில் சதை வளர்வதற்கான அறிகுறிகள் தென் பட்டால் ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து உடனடியாக சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

தகவல் : **டாக்டர் இரா.உமாராணி, பேராசிரியர், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம், திருப்பரங்குன்றம், மதுரை - 625 005.**